கண்டிருக்கிறோம். நாம் வெறும் கணக்குப் போடுவதில்லை. அந்த ஊரிலே இருக்கிற நிலைமைகளை வைத்துத் தயாரித்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது தருமம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழைகள், குடியானவர்கள் இவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் முயற்சி நம் எல்லோருக்கும் கிடைத்ததற்காக நாம் பெருமைப்பட வேண்டும். இந்த மன்றத்தில் நாம் உறுப்பினர்களாக இருக்கின்ற நேரத்தில் இந்த முயற்சி நடைபெறுவதற்காக நாம் நன்றி தெரிவித்துக்கொள்ளவேண்டும். அதோடு, இந்த மன்றம் சீக்கிரமாக இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கையுடன், என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்கள் சிக்கல்களைக் குறித்த திரு. எஸ். கணபதியா பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

7. அறிவிப்பு.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதாவை சட்டப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் மசோதாக்கள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1969).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

'that the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Bill *, 1969 (L.A. Bill No. 20 of 1969) be taken into consideration.'

In December 1968, the Government of Tamil Nadu appointed a Commission of Inquiry under the Commissions of Inquiry Act, 1952 (Central Act LX of 1952), for the purpose of making enquiry into the problems of agricultural labour in East Thanjavur district, the relationship between agricultural labourers and their employers

* **Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 21st August 1969.**